الحملة التوعوية { الرقمية والميدانية } لمواجهة فيروس كورونا

VS عناية

## تـــاميلـي

# கொரோனா எனும் நவீன வைரஸ் எமன்!

கொரோனா வைரஸ்! அது என்ன?

கொரோனா வைரஸ் என்பது அதிவேகமாகப் பரவும் ஒரு தொற்று வைரஸ் ஆகும். சாதாரண சளி-யிலிருந்து ஆரம்பித்து Midd e East Respiratory Syndrome (MERS-CoV) and Severe Acute Respiratory Syndrome (SARS-CoV) எனப்படுகின்ற மிகக் கடுமையான- ஆபத்தான நோய்கள் வரை பரவக் காரணமாகின்றது

புதிய-நவீன கொரோனா வைரஸ் என்பது என்ன?

இது ஒரு புதிய வகை வைரஸ் ஆகும். இதுவரை இவ்வகை வைரஸ் மனிதர்களிடத்தில் காணப்படவில்லை.

புதிய கொரோனா வைரஸ்

இந்த நவீன கொரோனா வைரஸ் ஏற்படுத்தும் தொற்றுநோய் அறிகுறிகள் என்ன?

இருமல்

காய்ச்சல்

மூச்சுத் திணறல்

சுவாசக் கோளாறுகள்

ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பரவக் கூடியதா. இந்த கொரோனா எனும் நவீன வைரஸ்..?

ஆம்..! பொதுவாக, இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவருடனான நெருங்கிய தொடர்பு மூலம் அதன் சில விளைவுகள் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுகின்றன!

புதிய நவீன கொரோனா வைரஸ்

இந்தப் புதிய கொரோனா வைரஸ்-க்கு தடுப்பூசி இருக்கின்றதா?

இந்தப் புதிய கொரோனா வைரஸை தடுக்கக்கூடிய தடுப்பூசி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

புதிய நவீன கொரோனா வைரஸ்-க்குரிய சிகிச்சை ஏதேனும் உண்டா?

இந்தப் புதிய வகை கொரோனா வைரஸ் ஏற்படுத்தும் நோயைக் குணப்படுத்தக்கூடிய சிகிச்சை முறை இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை. எனினும் இந்த வைரஸ் ஏற்படுத்தும் நோய்க்கோளாறுகளை குணப்படுத்த முடியும். அதுவும் இந்த சிகிச்சை, நோயாளியிடம் காணப்படும் நோயின் வீரியத்தைப் பொறுத்தே அமையும்.

ملتزمون بالتميز
ISO 9001:2015 EFQM CSR

جمعية عناية
www.enayah.sa
920021228
0552223140

للتبرع عبر SMS
12 ريال شهرياً أرسل رقم (1) إلى 5056

عناية .. علاج ووقاية
الجمعية الخيرية الصحية لرعاية المرضى
Charitable Health Society For Patients Care

تاميلي

புதிய நவீன கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து தப்பிப்பது எப்படி?

உங்கள் கைகளை தண்ணீர் மற்றும் சோப்பு கொண்டு 20 விநாடிகள் வரை நன்று கழுவுங்கள்.

சுவாசக் கோளாறு இருப்பதாக நீங்கள் சந்தேகிக்கப்படும் எந்தவொரு நபருடன் அமருவதைத் தவிர்க்கச் செய்யுங்கள்.

பாதுகாப்பு முகமூடியை அணியச் செய்யுங்கள்

விலங்குகளைத் தொடச் செய்யாதீர்கள்

கூட்டத்திலிருந்தும் விலகி இருங்கள்

புதிய நவீன கொரோனா வைரஸ் போன்ற கொடிய தொற்று நோய்க் கிருமிகளிலிருந்து காத்துக் கொள்வதற்கான முக்கிய பிராரத்தனைகள்

அனைத்துக்கும் முதலாக இறைவனிடம் உதவியைத் தேடுங்கள். அந்த இறைவல்லமையின் மீது முழுமையான நம்பிக்கை கொள்ளுங்கள். தான் நாடுவதையே அவன் நடக்கச் செய்கின்றான். நாம் நோய்வாய்ப்படும்போது, அவனே நம்மை குணமாக்குகின்றான்.

அண்ணலார் (ஸல்) அவர்கள் இவ்வாறு பிரார்த்தித்தார்கள்:

என் இறைவனே! நோய், பைத்தியம் (போன்ற மனநலக் கோளாறுகள்), தொழுநோய் போன்ற கொடுமையான நோய்களிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றேன்.



அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்

ஆதாரம்: முஸ்னத் அஹ்மத், அபூதாவூத், நஸாஈ

அண்ணலார் (ஸல்) அவர்களின் பிரார்த்தனைகளில் இதுவும் ஒன்றாக இருந்தது:-

என் இறைவனே! உனது பேருளின் பாராமுகத்திலிருந்தும், உனது பாதுகாப்பு (என்னை விட்டு) நீங்குவதிலிருந்தும், உனது எதிர்பாராத கோபத்திலிருந்தும், உனது ஒவ்வொரு அதிருப்தியிலிருந்தும் உன்னிடம் நான் பாதகாப்பு கோருகின்றேன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி)

ஆதாரம் : முஸ்லிம்

அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்கள் அருளினார்கள்:

எவர் ஒருவர், "பிஸ்மில்லாஹில்லதி லாயளுர்ரு மஅஸ்மிஹி ஷைஉன் ஃபில் அர்ளி வலா ஃபிஸ் ஸமாஇ வஹுவஸ் ஸமீஉல் அலீம்" எனும் துஆ-பிரார்த்தனையை (மாலை வேளையில்) மூன்று முறை ஓதிக் கொள்கின்றாரோ அவர் காலை வேளை வரை எந்தவொரு எதிர்பாரா ஆபத்துக்கும் ஆளாக மாட்டார். எவர் ஒருவர் இந்த துஆ-பிரார்த்தனையை காலை வேளையில் மூன்று முறை ஓதிக் கொள்கின்றாரோ அவர் மாலை வேளை வரை எந்தவொரு எதிர்பாரா ஆபத்துக்கும் துன்பத்துக்கும் ஆளாக மாட்டார்.

அறிவிப்பாளர்: உஸ்மான் இப்னு அஃப்பான் (ரலி)

ஆதாரம் : முஸ்னத் அஹ்மத்